# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 242/மா/2017

ஆணை எண். 68/2018

நாள் : 26/03/2018

திரு வீ. முருகேஷ்,
சென்னை – 600 028. – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 003. – எதிர் மனுதாரர்

சென்னை, தெற்கு கேசவ பெருமாள்புரம், எண். 43/68, 2–வது குறுக்குத் தெரு முகவரியில் வசிக்கும் திரு வீ. முருகேஷ் அவர்களின் 06.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 07.12.2017 அன்று பெறப்பட்டு, 242/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் மற்றும் 05.03.2018 அன்று நடைபெற்ற விசாரணையின்போது மனுதாரர் அளித்த வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, தெற்கு கேசவ பெருமாள்புரம், எண். 43/68, 2–வது குறுக்குத் தெரு முகவரியில் வசிக்கும் திரு வீ. முருகேஷ் என்பவர், சென்னை மாநகராட்சி, மண்டலம் – 13 வார்டு எண். 173–க்கு உட்பட்ட தெற்கு கேசவபெருமாள்புரம் பிரதான சாலை சீரமைக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டதென்றும், தற்பொழுது சாலை மிகவும் மோசமான நிலையில் உள்ளதெனக் குறிப்பிட்டுள்ளார். மாநகராட்சிக்கு பல மனுக்கள் அனுப்பியும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். முறையீட்டு மனுதாரர் 05.03.2018 அன்று நடைபெற்ற விசாரணைக்கு வருகை தந்து வாக்குமூலம் அளித்தார். சட்டமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.17.38 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதென்றும், பிரதான சாலை சீரமைக்கப்படாமல், உட்புற சாலைகள் மட்டும் சீரமைக்கப்பட்டுள்ளன என விசாரணையின்போது தெரிவித்தார். சாலை சீரமைப்பிற்காக 23.40 இலட்சம் ரூபாய் 19.12.2017 அன்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென்றும், நிர்வாக அனுமதி பெற்று சாலையினை விரைந்து சீரமைத்து தருமாறும் விசாரணையின்போது கேட்டுக் கொண்டார்.

2. முறையீட்டு மனுதாரர் விசாரணையின்போது சில ஆவணங்களை சமர்ப்பித்தார். அவ்வாவணங்களில் ஒன்றில், புகார் எண். 663 CMF சம்பந்தமாக தெரிவிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கும் (ரூ.17,38,000/–), மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவில் தாக்கல் செய்த

புகாரில் தெரிவிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கும் ரூ.23.40 இலட்சம் வேறுபாடு உள்ளதால் ஏதோ முறைகேடு நடந்துள்ளது என்பதற்கான ஐயம் ஏற்பட்டுள்ளதென்றும் விரிவான விளக்கம் மற்றும் விசாரணை வேண்டுமென விசாரணையின்போது தாக்கல் செய்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளார்.

3. சாலை மேம்பாட்டுப் பணிக்கு முதலில் ரூ.17.38 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு பின்பு ரூ. 23.40 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டதால் எந்த மாதிரியான முறைகேடு நடந்திருக்கும் என மனுதாரர் கருதுகிறார் எனத் தெரியவில்லை. முதலில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அத்தொகைக்கு நிர்வாக அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்வதுதான் நடைமுறை. பின்பே பணிகள் துவங்கும் இதுவே நடைமுறை. ஏனவே, தொடக்க நிலையிலேயே எதிர்மறை சிந்தனைகள் கொண்டு ஆதாரமின்றி புகார் அனுப்புவது சரியன்று. எனவே, மாநகராட்சி அலுவலர்களை தொடர்பு கொண்டு சீரற்று உள்ள சாலையினை சீரமைப்பதற்கு முறையீட்டு மனுதாரர் முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும். முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலையின் திட்ட மதிப்பீடு மற்றும் இதர நிர்வாக ரீதியிலான தொடர் நடவடிக்கைகளை தாமதமின்றி இறுதி செய்து, சாலை சீரமைப்புப் பணியினை விரைவில் மேற்கொள்ள 13–வது மண்டல அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட பொறியாளர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. மண்டல அலுவலர்,
மண்டலம் – 13,
சென்னை மாநகராட்சி,
எண்.115, டாக்டர் முத்துலட்சுமி சாலை,
அடையார், சென்னை – 600 020.

2. திரு வீ. முருகேஷ்,
எண்.43/68, 2–வது குறுக்குத் தெரு,
கேசவ பெருமாள் புரம்,
சென்னை – 600 028.

3. மாநகராட்சி ஆணையர்,
சென்னை மாநகராட்சி,
ரிப்பன் கட்டிடம், சென்னை – 600 003.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்